# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 499/2016

ஆணை எண்.118/2016

நாள் :04/07/2016

**30.06.2016** நாளிட்ட
**தினமலர்** நாளிதழ் செய்தி

**– முறையீட்டு மனுதாரர்**

**மண்டல அலுவலர்,**
**மண்டலம் – 14,**
**சென்னை மாநகராட்சி,**
**சென்னை –600 091.**

**– எதிர் மனுதாரர்**

சென்னை மாநகராட்சி, பெருங்குடி மண்டலம், 168 மற்றும்169 வார்டுகளில் துப்புரவுப் பணியில் நடந்த முறைகேடுகளை, விஜிலென்ஸ் விசாரணைக்கு உட்படுத்திய உதவி செயற்பொறியாளர், அந்த வார்டு கவுன்சிலர்களின் தலையீட்டில் பணி மாற்றம் செய்யப்பட்டார் என்று 30.06.2016 நாளிட்ட தினமலர் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம், 7(1) எண்ணிட்ட பிரிவின் கீழ் முறைமன்ற நடுவர் பொதுப்பணியாளர் அல்லது உள்ளாட்சி அமைப்பொன்று ஊழல் அல்லது சீர்கேடான நிர்வாகத்தல் ஈடுபட்டுள்ளது என முறைமன்ற நடுவரின் கவனத்திற்கு வந்திருக்கிற எதனையும் விசாரிக்கலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி நாளிதழில் வெளியிடப்பட்ட செய்தி நிர்வாகச் சீர்கேடு சம்பந்தப்பட்ட முறையீடு எனக் கருதப்பட்டு, 499/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## ஆணை

சென்னை மாநகராட்சி பெருங்குடி மண்டலம், 168 மற்றும் 169 வார்டுகளில் துப்புரவுப் பணியில் நடந்த முறைகேடுகளை, விஜிலென்ஸ் விசாரணைக்கு உட்படுத்திய உதவி செயற்பொறியாளர், அந்த வார்டு கவுன்சிலர்களின் தலையீட்டில் பணி மாற்றம் செய்யப்பட்டார் என்ற செய்தி குறித்து மேற்படி மண்டல அலுவலரின் அறிக்கை பெறப்பட்டது. பெருங்குடி மண்டலம், 168 (ம) 169 வார்டுகளில் துப்புரவுப் பணியில் நடந்த முறைகேடுகள் குறித்து உதவி செயற்பொறியாளர் யாரும் விஜிலென்ஸ் விசாரணைக்கு உட்படுத்த வில்லை

என்றும் இதன் காரணமாக உதவி செயற்பொறியாளர் யாரும் பணியிடமாறுதல் செய்யப்படவில்லை என மண்டல அலுவலர் தெரிவித்துள்ளார். மேலும் 25.10.2011 முதல் நாளது தேதிவரை வார்டு எண். 168 (ம) 169 க்கு சம்பந்தப்பட்ட பகுதி எண். 42ல் பணியிலிருந்த உதவி செயற்பொறியாளர்களின் விவரங்களையும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி தினமலர் நாளிதழ் செய்தியில் பணி மாறுதலுக்கு உட்படுத்தப்பட்ட உதவி செயற்பொறியாளரின் பெயர் மற்றும் பணி மாறுதல் செய்யப்பட்ட நாள் எதுவும் குறிப்பிடப்படவில்லை எனவே மண்டல அலுவலரின் அறிக்கையை ஏற்று நாளிதழில் வந்த செய்தியில் உண்மைத் தன்மை இல்லை என இம்முறைமன்ற நடுவம் கருதி, இந்நேர்வின் சம்பந்தப்பட்ட நடவடிக்கையை இத்துடன் முடித்து வைத்து ஆணையிடுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

உதவி செயலாளர்

பெறுநர்

மண்டல அலுவலர்,
மண்டலம் – 14,
சென்னை மாநகராட்சி,
எண்.6/64, புழுதிவாக்கம் பிரதான சாலை,
உள்ளகரம், புழுதிவாக்கம்,
சென்னை –600 091.

/உண்மை நகல்/

செயலாளருக்காக.